வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 02.05.2024 வியாழக்கிழமை இதழ் : 123 பக்கங்கள் : 12

# 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறை!

## மே தினத்தில் உறுதியளித்தார் சஜித்

கொழும்பு, மே 02

**அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அப்படியே நடைமுறைப்படுத்த தமது ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

மேலும், திருத்தப்பட்ட மக்கள் சார்பான சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் தமது ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு - புறக்கோட்டையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் - சிறுவர், மகளிர் உரிமைக்கான ஜனாதிபதி செயலணி, இளைஞர் ஜனாதிபதி செயலணி, சுயாதீன ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு எமது ஆட்சியில் நிறுவப்படும் - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். (ஐ)





# விஜயதாஸவே சு. கவின் ஜனாதிபதி வேட்பாளர்!

## மைத்திரிபால அறிவிப்பு

கொழும்பு, மே 02

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ களமிறக்கப்படுவார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பின் பின்னர் நேற்று மாலை கம்பஹாவில் நடந்த சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் விஜயதாஸ ராஜபக்ஷ பங்கேற்றார்.

மேலும், நான் ஒரு தடவை ஜனாதிபதியாக 11

# முழுமையாக தமிழில் உரையாற்றிய சஜித்!


தலவாக்கலை, மே 02

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனது உரையை முழுமையாக தமிழில் ஆற்றி பலரின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

நேற்றைய தினம் தலவாக்கலையில் நடந்த மே தினக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது உரையை முழுமையாக தமிழிலும் சிங்களத்திலும் ஆற்றினார்.

வழக்கமாக சிங்களத் தலைவர்கள் ஒரு சில 11

# பேரெழுச்சியுடன் தமிழ் அரசின் மே தின கூட்டம் கிளிநொச்சியில்



கிளிநொச்சி, மே 02

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மே தினக் கூட்டம் தமிழ்த் தேசிய மே நாளாக நேற்று கிளிநொச்சியில் கடைப்பிடிக்கப்பட்டது.

கிளிநொச்சி பிள்ளையார் ஆலயம் முன்பாக ஆரம்பமான ஊர்வலம் கிளிநொச்சி மத்திய கல்லூரியை சென்றடைந்தது. 11

# மீண்டும் குறைகிறது மின்சார கட்டணம்!

கொழும்பு, மே 02

மே மாதத்தில் மின் கட்டணத்தை குறைப்பதற்கான வாய்ப்பு காணப்படுவதாக மின்சக்தி - எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மே மாதத்தில் மற்றுமொரு கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதுவரை 11

# வட, கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் மரபுரிமைகளை பாதுகாக்க வேண்டும்!

## ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், மே 02

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களின் மரபு வழித் தாயகம். இங்கு குடிசன பரம்பல்களை மாற்றியும் கலாசார ஊடுருவல்களை ஏற்படுத்தியும் அங்கு வாழும் மக்களின் மொழி, கலாசார, பண்பாடு மற்றும் பொருளாதார வளங்களை சீரழிக்காமல் காலாதிகாலமாக வாழ்ந்துவரும் அந்த மக்களின் மரபுரிமைகளை பேணி பாதுகாக்கக்கூடிய வகையில் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மேதினக் கூட்டம் மானிப்பாய் 11

# மக்கள் வாக்கெடுப்பு நடப்பதனால் தமிழ் பொது வேட்பாளர் அவசியம்!

## விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, மே 02

வட, கிழக்கில் மக்கள் தீர்மானத்துக்காக சர்வதேச நாடுகளால் இங்கு தேர்தல் நடத்தப்படவேண்டும். அதை உலகுக்கு எடுத்துக்கூற ஒரு தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்ற வேண்டும். அவருக்கு எம் தமிழ்மக்கள் வாக்களித்து எமது கோரிக்கையை உலகறியச் செய்ய 11

# தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளம் 1,700 ரூபாய்!

## வெளியானது வர்த்தமானி

கொழும்பு, மே 02

தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளம் 1,700 ரூபாயாக அதிகரிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, தோட்டத் தொழிலாளி ஒருவருக்கு 1,350 ரூபாய் ஊதியமாகவும் 350 ரூபாய் மேலதிக 11

# ஐ. ம. சக்தியும் ஜே. வி. பியும் எம்முடன் இணைய வேண்டும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரம்சிங்க



கொழும்பு, மே 02

பாரம்பரிய அரசியலை கைவிட்டு எம்மோடு இணையுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் அழைப்பு விடுக்கிறேன் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வழமையான அரசியலில் செயல்பட்டு சர்வதேச 11

# மக்கள் எங்களுடன் கைகோக்க வேண்டும்!

## மகிந்த ராஜபக்ஷ



கொழும்பு, மே 02

ஜனாதிபதித் தேர்தலில் எமது வேட்பாளரே வெற்றி பெறுவார். நாட்டு மக்கள் அனைவரும் எம்முடன் கைகோக்க வேண்டும் - என்று முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

ஏற்கனவே இந்தப் பத்தியில் சொன்னதுபோல தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை பொது அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், சமயத் தலைவர்கள், புத்திஜீவிகள் கொண்டு குழு ஒன்று கையில் எடுக்கத் தீர்மானித்திருப்பது இந்த விடயம் சரியான திசையில் பயணிக்கத் தொடங்கியிருக்கிறது என்ற நம்பிக்கையை இப்போது ஏற்படுத்தியிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் வவுனியாவில் கூடிய சுமார் முப்பதுக்கும் அதிகமான அமைப்புகள், புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள் நீண்ட நேரம் இதுகுறித்து விவாதித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றனர்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து, அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக்கான பொது வாக்கெடுப்பாக கையாள்வது என்று நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்திருக்கின்றனர்.

இதற்காக சிவில் சமூகமும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

நேற்று இந்தப் பத்தியில், கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வாக்குகள் பற்றியும் அவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளில் இருபத்திஐந்து வீதத்துக்கும் சற்றுக்கூடுதலாக பெற்றபோதிலும் அவர்களே தமிழ் மக்களின் அரசியல் தலைமையை இன்று வரை கொண்டிருப்பது பற்றியும் எழுதியிருந்தேன். அதனைப் படித்துவிட்டு எம்மோடு பேசிய நண்பர் ஒருவர், அந்தத் தேர்தலையும் தற்போது பேசப்படும் பொது வேட்பாளர் விடயத்தையும் ஒன்றாக பார்க்க முடியாதே என்று கேள்விக்கு உட்படுத்தினார்.

அது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்துக்கான தேர்தல், அதில் அவர்கள் எவ்வளவு வாக்குகளைப் பெற்றார்கள் என்பதை விட, எத்தனை பிரதிநிதிகளை பாராளுமன்றத்தில் பெற்றார்கள் என்பதுதான் கவனத்தில் எடுக்கப்படும். ஆனால், பொதுவேட்பாளர் என்பது, ஒரு பொதுசன கருத்துக்கணிப்பாக - வாக்கெடுப்பாக நடத்தப்படுகின்றபோது எவ்வளவு வாக்குகளைப் பெற்றார்கள் என்பதே கவனத்தில் எடுக்கப்படும் என்று நண்பர் விளக்கம் தந்தார்.

உண்மைதான், அறுபதாயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்ற போதிலும் இரண்டு எம்.பிக்களை கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இப்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத்தான் பார்க்கப்படுகின்றார்கள். நண்பர் சொல்வதுபோல பாராளுமன்றத் தேர்தலையும் இதனையும் ஒரே பார்வையில் பார்க்க முடியாதுதான். அதற்காக, தேர்தல் என்று வந்துவிட்டால் மக்கள் வாக்களிப்பார்களா? இல்லையா என்பதெல்லாம் இங்கு இரண்டாம் பட்சமானவை.

யுத்தம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும், தமிழ் மக்கள் ஒரு வேட்பாளருக்கு வாக்களித்தே வந்திருக்கின்றார்கள். அது தமிழ்த் தேசியக் கட்சிகள் சொன்னதற்காகத்தான் வாக்களித்தார்களா என்பது கேள்விக்கு உரியது என்றாலும் அவர்கள் ராஜபக்ஷக்களுக்கு எதிராக அணி திரண்டனர் என்று நம்பினாலும் அவ்வாறு அணி திரண்டபோது அவர்களுக்கு எதிரானவர்களுக்கு வாக்களித்தார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபயவுக்கு எதிரான மக்கள் மனநிலை அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்கும் முடிவுக்கு அவர்களைத் தள்ளியது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் சஜித், மூன்று இலட்சத்து பன்னிரண்டாயிரம் வாக்குகளைப் பெற்றார் என்றால் ஒரு தமிழ் வேட்பாளருக்கு ஏன் வாக்களிக்கத் தயங்கப்போகிறார்கள் என்ற கேள்வியை தவிர்க்க முடியவில்லை.

இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிட்ட போது தேர்தலை பகிஷ்கரிக்கும் முடிவை விடுதலைப் புலிகள் எடுத்தனர். எதற்காக அவர்கள் இந்த முடிவை எடுத்தனர் என்பது பற்றி பல தடவைகள் இந்தப் பத்தியில் பார்த்திருக்கின்றோம். அவர்களின் முடிவையடுத்து யாழ்ப்பாணத்தில் சுமார் இரண்டு இலட்சம் மக்கள் வாக்களிக்க வில்லை. ஆனால், வன்னியில் முப்பத்திஐந்து வீதமான மக்களும் மட்டக்களப்பில் நாற்பத்தி எட்டு வீதமான மக்களும் வாக்களிப்பில் கலந்துகொண்டதோடு, வாக்களித்தவர்களில் அண்ணளவாக எண்பது வீதத்தினர் ரணிலுக்கே வாக்களித்திருந்தனர். யாழ்ப்பாணத்திலும் அவ்வாறு வாக்களித்திருந்தால் ரணில் விக்கிரமசிங்கவே வெற்றி பெற்றிருப்பார். ஆனால், அப்படி அவர் வெற்றிபெறக் கூடாது என்பதற்காகவே புலிகள் அப்படியொரு முடிவை எடுத்திருந்தனர்.

ஆனால், யாரும் புலிகளின் கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று விமர்சிக்கவில்லை. காரணம் அந்தப் பகிஷ்கரிப்பு ஒருவரின் வெற்றியை மாற்றியமைத்திருந்தது.

தேர்தல் என்றால், அது இலக்கங்களின் கணக்குத்தான். ஆனாலும், இன்று தமிழ் மக்கள் பல்வேறு குழுக்களாக சிதறிப்போய் விட்டநிலையில், அவர்களை ஓர் அணியின் கீழ் - ஒரு தேசமாக ஒன்றிணைக்க இது சரியான தருணம் என்று நம்பப்படுகின்றது. இதனை ஒரு பரீட்சார்த்த களமாக இல்லாமல், பலப் பரீட்சைக்களமாக - ஒரு வேள்வியாக நினைத்து அனைத்துத் தரப்பினரும் பணியாற்றினால் - அதனால், தமிழ் மக்கள் மீண்டும் ஒரு தேசமாக மேலெழுந்து வர முடியும். இல்லாமல், இப்படியே தொடர்ந்தால், என்ன நடக்கும் என்பதற்கு விளக்கம் தேவையிருக்காது.!

- ஊர்க்குருவி.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் மானிப்பாயில்!



யாழ்ப்பாணம், மே 02

ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் மே தின நிகழ்வு நேற்று மானிப்பாய் பிரதேச சபையின் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

"அரசின் அடக்குமுறைகளை உடைத்தெறிவோம்" எனும் தொனிப்பொருளில் இந்த தொழிலாளர் தின நிகழ்வு நடைபெற்றது.

மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான செல்வி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சபா குகதாஸ், பா. கஜதீபன், ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன், முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர்கள், கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# தேசிய மக்கள் சக்தி யாழில் மே தினக் கூட்டம் நடத்தியது



யாழ்ப்பாணம், மே 02

தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் "நாட்டைக் கட்டியெழுப்பும் - தீர்வுக்கு ஓரணியில் இனம், மதம், சாதி, பேதம் இல்லாத புதிய சுதந்திர போராட்டத்துக்காக போராடுவோம்" என்னும் கருப்பொருளிலான மே தின கூட்டம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கலந்துகொண்டு இனம், மதம், சாதி, பேதம் இல்லாத புதிய சுதந்திர போராட்டத்துக்காக குரல் கொடுப்போம் எனும் கருப்பொருளில் உரையாற்றினர்.

இதில், தேசிய மக்கள் சக்தியின் மத்திய செயல் குழுவின் உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட பிரதான அமைப்பாளர் இ. சந்திரசேகரம், மதத்தலைவர்கள், மகளிர் அமைப்பின் செயற்பாட்டாளர்கள், மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்பாளர்கள், இணைப்பாளர், தோட்டத் தொழிலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# மார்க்சிச லெனினிச கட்சி வவுனியாவில் ஊர்வலம்!



வவுனியா, மே 02

"உழைக்கும் மக்கள் ஒன்றிணைவோம் நாட்டின் வளங்களை பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சியின் மே தின ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஆரம்பமான இந்த ஊர்வலம் பஜார் வீதி ஊடாக வவுனியா நகர மண்டபத்தை அடைந்தது. அதன் பின்னர் அங்கு பிரதான மே தினக் கூட்டம் இடம் பெற்றது.

இந்தப் பேரணியில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டிருந்ததுடன் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியிருந்தனர். (ஐ)

# சாதாரண தர பரீட்சைகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

கொழும்பு, மே. 02

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நடாத்துவதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சீரற்ற வானிலை மற்றும் மழையுடன் கூடிய அவசர நிலைமைகள் ஏற்பட்டால், தேவையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்துத் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

பரீட்சை வினாத்தாள் இன்று விநியோகம் செய்யப்படவுள்ளன.

மழை காரணமாக மாணவர்கள் பரீட்சை நிலையத்திற்கு செல்வதில் சிரமம் ஏற்பட்டால், "117" என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்க முடியும்.

இதேவேளை, இவ்வருடம் 459,979 பரீட்சார்த்திகள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதோடு 3527 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.05.2024 வியாழக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தேர்தல் கொதிநிலை

மே தின நிகழ்வுகளில் ஒவ்வொரு பிரதான வேட்பாளரும் தங்களின் செல்வாக்கைக் காண்பிக்க முயன்றிருக்கின்றனர். இந்த மாதத்திலிருந்து தேர்தல் களம் சூடுபிடிக்கும். தேர்தல் நெருங்கும்போது பல்வேறு விடயங்கள் பேசுபொருளாகும். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இதில் பிரதானமானது. கர்தினால் மல்கம் ரஞ்சித் - உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு தீர்வைத் தராத கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டாமென்று பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார். இதன்மூலம் அவர் நேரடியாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க வேண்டாமென்றே கூறியிருக்கிறார் என்று கருதலாம் - ஏனெனில், ராஜபக்ஷக்களின் ஆதரவுடன்தான் ரணில் அதிகாரத்துக்கு வந்தார்.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு தமது ஆட்சியில் தீர்வு வழக்கப்படுமென்று தேசிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் சக்தியும் கூறிவருகின்றன. அவற்றின் வேட்பாளர்களான அநுரகுமார திஸநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோர் கூறிவருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில் மல்கம் ரஞ்சித் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை அரசியலாக்க முயற்சிக்கிறாரென சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர் - அவற்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே தற்போது இவ்வாறானதோர் அறிவிப்பை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பலவாறான குற்றச்சாட்டுகளும் சர்சைக்குரிய கருத்துகளும் உண்டு. ஒரு சாரார் இது ஓர் உள்நாட்டு சதியென்று கூறிவருகின்ற நிலையில் இன்னொருபுறம் இது முற்றிலும் வெளிநாட்டு பயங்கரவாதத் தாக்குதல் என்று இன்னொரு சாரார் குற்றஞ்சாட்டி வருகின்றனர். குறிப்பாக சனல்-4 காணொலி வெளியானதைத் தொடர்ந்து சாதாரண மக்கள் மத்தியில் இது ஓர் உள்நாட்டு சதி என்றவாறே புரிந்து கொள்கின்றனர்.

அதிகாரத்துக்கு வரவேண்டும் என்னும் ஆசையால் சிலர் அப்பாவி மக்களை பலியிட்டிருக்கின்றனர் - என்று கத்தோலிக்க மக்கள் புரிந்துகொள்வர். அவ்வாறானதொரு பின்னணியில் ராஜபக்ஷக்கள் மற்றும் ராஜபக்ஷக்களுடன் கூட்டு வைத்திருப்பவர்களை அவர்கள் நிச்சயம் வெறுப்பார்கள்.

ஏனெனில், இது ஓர் உணர்வுபூர்வமான விடயம். ரணில் கெட்டித்தனமானவர் என்பது அறிவுபூர்வமான ஒரு விடயமாக இருக்கலாம். ஆனால், உணர்பூர்வமாக சிந்திப்பவர்கள் ராஜபக்ஷவை எதிர்க்கும் எண்ணத்துக்கே முக்கியத்துவமளிப்பர் - ஒருவேளை ராஜபக்ஷவுடன் ரணில் கூட்டு வைத்துக் கொண்டால் அவரையும் எதிர்ப்பார்கள். இவ்வாறானதொரு பின்புலத்தில் மல்கம் ரஞ்சித்தின் அறிவிப்புக்கு ஒரு பெறுமதி உண்டு.

தேர்தல் நெருங்கும்போது, இந்த விவகாரம் இன்னும் கொதிநிலை அடையலாம். இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையில் ஒருவரை ஒருவர் எவ்வாறு மக்கள் மத்தியில் பலவீனப்படுத்தலாம் என்பதிலேயே கவனம் செலுத்துவர். ஒரு சொற் சமராகவே தேர்தல் களம் காட்சியளிக்கும். அவ்வாறானதொரு பிரசாரத்தின்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலே பிரதான பேசுபொருளாக இருக்கும். இந்தத் தென்னிலங்கை தேர்தல் ஆட்டத்துக்குள் தமிழர்களுக்கு என்ன வேலை? இந்தக் கேள்வி தொடர்பில்தான் தமிழ் அரசியல் சமூகம் சிந்திக்க வேண்டும்.

# ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெல்வது உறுதி!

அசோக அபேசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மே. 02

"எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச வெற்றி பெறுவது உறுதியென" என பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

விரைவில் இந்த நாட்டில் தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனித்து போட்டியிட்டாலும் கூட்டணியாக போட்டியிட்டாலும் தேர்தலில் தோல்வியடைவது நிச்சயம்.

யானை மொட்டு கூட்டணியிலேயே இம்முறை ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷ தரப்பினரும் மே தின கூட்டங்களையும் பேரணிகளையும் முன்னெடுத்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியினர் எவ்வாறான மாறுவேடசுற்றில் வந்தாலும் மக்கள் அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றியடைவது உறுதி- என்றார். (அ)

## யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர் மீது அபகீர்த்தி ஏற்படுத்திய சுகாதார ஊழியர் மீது சட்ட நடவடிக்கை!

யாழ்ப்பாணம், மே. 02

யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாக கூறி தாதியர் மீது சமூக ஊடக செயலி மூலமாக அவதூறு செய்த சுகாதார ஊழியர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறித்த தகவலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் தான் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்ததாகவும் அப்போது [illegible] ஒரு நோயாளரிடம் தாதியர் நடந்து கொண்ட விதம் பற்றி தாதியர்களுக்கும் போதனா வைத்தியசாலைக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் சமூக ஊடக செயலி மூலம் வீடியோ பதிவினை மேற்கொண்டிருந்தார்.

இது விடயமாக சம்பந்தப்பட்ட பிரிவு உத்தியோகத்தரின் வைத்தியசாலை நிர்வாகத்ததுடன் கலந்துரையாடி, பின்வரும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

1. மேற்படி நபர் தாதியர் சேவையைப்பற்றி மிக இழிவாகக் கதைத்ததினால் அது தாதியர் சேவைக்கும் வைத்தியசாலைக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் தினசரி வரும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் மத்தியில் பதட்டத்தை ஏற்படுத்தியதன் காரணமாக அவர் மீது பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.


2. குறித்த உத்தியோகத்தர் சம்மந்தமாக சுகாதார அமைச்சு மற்றும் அவர் பணியாற்றும் வைத்தியசாலை நிர்வாகம், பிராந்திய சுகாதார நிர்வாகங்களுக்கு அறிவித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

3. சுகாதார அமைச்சின் விசாரணையின் போது குறிப்பிட்ட உத்தியோகத்தர் வைத்தியசாலையில் நடந்த சம்பவம் பற்றி தெளிவாக அது நடந்த நேரம், விடுதி, சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர் பற்றி அறியத்தருவாராயின் அது விடயமாகவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத்தீர்மானிக்கப்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலையானது பல்லாயிரக்கணக்கான மக்கள் தினசரி பல்வேறு சிகிச்சைகளுக்காக வந்து செல்கின்ற இடம். ஆகவே இவ்வாறான அவநம்பிக்கை ஏற்படுத்துகின்ற செய்திகள் சிகிச்சைக்காக வருபவர்களை, பொது மக்களையும் பதற்றத்திற்குள்ளாக்கக்கூடியது. அத்துடன் வைத்தியசாலைச் சேவைகள் தொடர்பாக நம்பிக்கையீனத்தையும் வெறுப்புத்தன்மையையும் ஏற்படுத்தக் கூடும். ஆகவே இவ்வாறான நடவடிக்கைகளை பொது மக்கள் நலன் கருதி அனுமதிக்க முடியாது.

வைத்தியசாலையில் காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் கவனத்தின் கொள்ளவேண்டிய ஏனைய விடயங்கள் பற்றி பணிப்பாளர் பணிமனைக்கு எழுத்து மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ உரியவர் முறைப்பாடு செய்கின்ற போது, தகுந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்படும். ஆகவே பொதுமக்கள் இது விடயத்தில் மீண்டும் அவதானமாக இருக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் - என தெரிவித்தார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 02 வியாழக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 19
நல்ல நேரம் : 10.30 - 11.30
ராகு காலம் : 01.30 - 03.30
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையைமாற்றுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். நன்மை நடக்கும் நாள்.

**இடபம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் தள்ளிப் போன விஷயங்கள் முடியும். மாற்றம் ஏற்படும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உயரதிகாரிகள் உங்களை குறை கூறுவார்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக்கொள்வார்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
ராஜதந்திரமாக செயல்பட்டுசில காரியங்களை முடிப்பீர்கள். பழைய சிக்கல்கள் தீரும். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். வெற்றி பெறும் நாள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். நன்மை நடக்கும் நாள்.

**துலாம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். வேலைகள் விரைந்து முடியும். நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வெியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நல்லன நடக்கும் நாள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் விமர்ச னங்களுக்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பின் மையால் லாபம் குறையும். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக் குறை நீடிக்கும். சக ஊழியர்களி டம் விட்டுக் கொடுத்து போங்கள். நிதானம் தேவைப்படும்

**மீனம்**
தன்னம்பிக்கையுடன் பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். மதிப்புக் கூடும் நாள்.

# இலங்கைக்கு சட்டவிரோதமாக செல்ல முயன்ற தம்பதியர் உட்பட 8 பேர் கைது

இராமநாதபுரம், மே 02

இந்தியாவில் தனுஷ்கோடி கடல் வழியாக படகில் சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்பி வர முயன்ற இலங்கை கணவன், மனைவி மற்றும் அவர்களுக்கு உதவிய 6 பேர் என 8 பேரை தங்கச்சிமடம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதானவர்களில் நால்வர் மீது முன்னதாக இலங்கைக்கு ஆட்களை சட்டவிரோதமாக அனுப்பி வைத்தனர் என்ற வழக்கு நிலுவையில் உள்ளது.

வவுனியாவை சேர்ந்த தம்பதியரே 2017ஆம் ஆண்டு விமானம் மூலம் இந்தியா வந்து சட்டவிரோதமாக தப்பிச் செல்ல முயன்றுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

நேற்று நள்ளிரவு இவர்கள் தங்கச்சிமடம் மாந்தோப்பு கடற்கரையில் இருந்து நாட்டுப் படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கை செல்ல முயன்றனர். இந்த நிலையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

(ஐ)

# மாணவிகளை தவறாக வழிநடத்திய பேராசிரியைக்கு 10 ஆண்டுகள் சிறை!

சென்னை, மே 02

கல்லூரி மாணவிகளை தவறாக வழிநடத்திய விவகாரத்தில் பேராசிரியை நிர்மலா தேவிக்கு 10 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறீவில்லிபுத்தூர் மகளிர் நீதிமன்ற நீதிபதி பகவதியம்மாள் தண்டனை விவரத்தை அறிவித்தார்.

கல்லூரி மாணவிகளை தவறாக வழிநடத்திய வழக்கு 2018ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்தது. 2018 முதல் நிர்மலா தேவி சிறையில் இருந்து வருவதால், அந்த ஆண்டுகள் தவிர்த்து, மீதமுள்ள ஆண்டுகள் சிறையில் இருப்பார் எனத் தெரிகிறது.

இந்த வழக்கில் நிர்மலா தேவி குற்றவாளி என சிறீவில்லிபுத்தூர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கியது. அதனைத் தொடர்ந்து நேற்று தண்டனை விவரங்கள் அறிவிக்கப்பட்டன.

(ஐ)

# விபத்தில் 7 பேர் பலி

சென்னை, மே 02

சுற்றுலாத் தலமான ஏற்காட்டில் சென்ற பேருந்து 100 அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் 7 பேர் உயிரிழந்தனர். 63 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் ஸ்டாலின், அரச நிவாரணம் வழங்கவும் உத்தரவிட்டுள்ளது.

(ஐ)

# செந்திலுக்கு 36ஆவது முறை பிணை மறுப்பு

சென்னை, மே 02

தமிழக அமைச்சராக இருந்தவர் செந்தில் பாலாஜி. இவரை கடந்த ஆண்டு ஜூன் 14-ம் தேதி சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பிணை கேட்டு அவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் அவரின் விளக்கமறியல் தடைக் காலம் நேற்று முன்தினம் முடிவடைந்தது.

இந்தநிலையில், செந்தில் பாலாஜிக்கு எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி வரை மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்மூலம் 36ஆவது முறையாக செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# காவிரியில் தண்ணீரை திறக்க உச்சநீதிமன்றத்தை நாடுவோம்!

## அமைச்சர் துரைமுருகன்



சென்னை, மே 02

காவிரியில் தண்ணீர் திறந்து விடுமாறு உச்சநீதிமன்றத்தை நாடுவோம் என்று அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவரிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காவிரியில் தண்ணீர் திறந்து விடுமாறு ஒழுங்காற்று குழு பரிந்துரைத்தபோதும் கர்நாடக அரசு திறக்கவில்லை. என்றைக்காவது கர்நாடகா அரசு நாங்கள் தண்ணீர் திறந்து விடுகிறோம் என்று சொல்லி இருக்கிறார்களா? இல்லை. அணைகளில் அதிகமாக தண்ணீர் இருக்கும்போதும் அதேபாட்டுதான். குறைவாக தண்ணீர் இருக்கும் போதும் அதேபாட்டுதான். காவிரி ஒழுங்காற்று குழு தண்ணீரை திறந்து விடுமாறு கூறியும் திறக்க மாட்டேன் என்று கர்நாடக அரசு கூறுகிறது.

ஆகையால் மத்திய அரசை கர்நாடக அரசு மதிக்காமல் இருக்கிறது. இதில் கேள்வி கேட்க வேண்டியது உச்சநீதிமன்றம்தான். எனவே, காவிரியில் தண்ணீர் திறந்து விடுமாறு உச்சநீதிமன்றத்தை நாடுவோம் - என்றார்.

(ஐ)

# தோல்வி பயத்தால் மோடி அவதூறை பரப்பி வருகிறார்

## காங்கிரஸ் தமிழக தலைவர்

சென்னை, மே 02

தோல்வி பயத்தினால் பிரதமர் மோடி அடிப்படை உண்மைகளுக்கு புறம்பாக ஆதாரமற்ற அவதூறான கருத்துகளை தேர்தல் பரப்புரைகளில் பேசி வருகிறார் - இவ்வாறு தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், மக்களவைத் தேர்தலின் முதல், இரண்டாம் கட்டம் முடிந்த நிலையில் மிகுந்த பதற்றத்துடனும், தோல்வி பயத்தினாலும் பிரதமர் மோடி அடிப்படை உண்மைகளுக்கு புறம்பாக ஆதாரமற்ற அவதூறான கருத்துகளை தேர்தல் பரப்புரையின் போது பேசி வருகிறார். மும்பையில் உரையாற்றும் போது, நான் உயிருடன் இருக்கும் வரை மத அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை அனுமதிக்கமாட்டேன் என்று பேசியிருக்கிறார்.

10 ஆண்டுகாலம் பிரதமராக இருந்த ஒருவருக்கு இட ஒதுக்கீடுகள் மதத்தின் அடிப்படையில் வழங்கப்படுவது அல்ல. சமூக, கல்வி ரீதியாக பின்தங்கிய மக்கள் எந்த மதத்தில் இருந்தாலும், அவர்கள் எந்த சாதியை சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை அந்தந்த மாநில அரசுகள் அமைக்கும் பின்தங்கியோர் ஆணையம் வழங்குகிற தரவுகளின்படி அந்தந்த மாநில அரசுகள் இடஒதுக்கீடு வழங்குகின்றன.

எனவே, 2024 மக்களவைத் தேர்தல் என்பது இந்திய மக்களுக்கு வாழ்வா? சாவா? என்பதே பிரச்னை. இந்தியாவின் எதிர்காலமே மக்களவை தேர்தல் முடிவை பொறுத்திருக்கிறது. இந்தியாவில் சர்வாதிகார, பாசிச, மக்கள் விரோத ஆட்சி அகற்றப்பட வேண்டுமெனில் பா.ஜ.க.வை தோற்கடிப்பது மிகமிக அவசியம் என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார்கள் - என்றுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களை காணிகளின் உரிமையாளர்களாக மாற்றுவேன்!

## சஜித் பிரேமதாஸ சூளுரை

கொழும்பு, மே. 02

**மலை நாட்டு மக்களை காணி உரிமையாளர்களாக மாற்றுவேன் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

தேசிய தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையில் நேற்று புதன்கிழமை தலவாக்கலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவதுற்-

நான் மலை நாட்டு மக்களையும், அவர்களின் மொழி உரிமையையும் பாதுகாப்பேன். அவர்களுக்கு காணி மற்றும் வீட்டு உரிமை பெற்றுக் கொடுப்பேன். மலையக மக்களின் கிராமிய, நகர அபிவிருத்திக்கு நான் பொறுப்பு. அவர்களின் மருத்துவ, கல்வி, சத்துணவு உரிமைகளை பாதுகாப்பேன். தோட்டத் தொழிலாளர்களை சிறு தேயிலை உற்பத்தியாளர்களாக மாற்றுவேன்.

உங்களின் அரசியல், மத, கலாசார உரிமைகளும் பாதுகாக்கப்படும். அனைத்து நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காக உழைத்த பெருந்தோட்ட மக்களுடன் மே தினக் கூட்டத்தை நடத்த வாய்ப்பு கிடைத்தமையை நான் பாக்கியமாக கருதுகின்றேன்.



மலைநாட்டு மக்கள் வாழும் சகல மாவட்டங்களிலும் அவர்களின் சகல உரிமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான விசேட அரச பொறிமுறையொன்றை உருவாக்குவேன். மலைநாட்டு மக்களை தொழிலாளர்களாக அன்றி சொந்தமான காணி உடைய சிறு தோட்ட உரிமையாளர்களாக்கி, உங்களை அந்த காணிக்கான உரிமையாளராகவும் ஆக்குவேன்-என்றார்.

# வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு முறையான வேலைத்திட்டம் வேண்டும்

கொழும்பு, மே. 02

இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே கருத்துத் தெரிவிக்கையில்-

வாகன இறக்குமதி தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு அரசாங்கத்தினால் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் எனவும் வாகனங்களை இறக்குமதி செய்யும் முன்பு மக்கள் விரும்பியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்-என்றார். (அ)

# யானைத் தந்தம் வைத்திருந்த 2 பேர் நீர்கொழும்பில் கைது!

கொழும்பு, மே. 02

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எத்துகால பகுதியில் யானைத் தந்தங்களுடன் இருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணேமுல்ல மற்றும் தெவிநுவர ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 24 மற்றும் 42 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 2 யானைத் தந்தங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 12 இலட்சம் ரூபா பெறுமதியான 7 மாடுகள் திருடிய நால்வர் கைது!

கொழும்பு, மே. 02

லுணுகம்வெஹெர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 12 இலட்சம் ரூபா பெறுமதியான 7 மாடுகளைத் திருடியதாகக் கூறப்படும் நால்வர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் லுணு கம்வெஹெர, உடவலவ மற்றும் பல்லேபெத்த ஆகிய பிரதேசங் களில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் லுணுகம்வெஹெர, உடவலவ மற்றும் பல்லேபெத்த ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29, 30, 41 மற்றும் 53 வயதுடையவர்களாவர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 5 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாடுகளை திருடுவதற்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் வேனொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு லுணுகம் வெஹெர பொலிஸ் நிலையத் திற்கு எடுத்துச் செல்லப்பட் டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை லுணுகம்வெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சு.கவை ஐ.தே.கவுடன் இணைக்க ஒருபோதும் முயற்சிக்கவே இல்லை

## சந்திரிகா பண்டாரநாயக்க கூறுகிறார்

கொழும்பு, மே. 02

சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்கு எந்த வகையிலும் முயற்சிக்கவில்லை எனவும், கட்சியை கட்டியெழுப்புவதற்கு தேவையான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

சுதந்திரக்கட்சி இன்று பூச்சிய நிலைக்கு வந்துள்ளது. கட்சி பலகூறுகளாக பிளவுபட்டுள்ளது. கட்சியை மீள கட்டியெழுப்புவதென்பது இலகுவான விடயமாக அமையாது. அவ்வாறான முயற்சி எடுக்கப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்க தயார். கிராம மட்டத்திலான மக்கள் சுதந்திரக் கட்சியுடன் உள்ளனர். எனவே, புதிய நபர்களுடன் சுதந்திரக்கட்சியை கட்டியெழுப்ப முடியும் என நம்புகின்றேன்.



எனது மகன் அரசியலுக்கு வரமாட்டார். 60 வயது கடந்ததும் செயற்பாட்டு அரசியலில் இருந்து ஒதுங்குவேன் எனக் கூறினேன். அவ்வாறு செய்தேன்.

கட்சிகள் மற்றும் அமைப்புகள் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே 2015 இல் பொது வேட்பாளர் முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. சுதந்திரக்கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைக்கும் திட்டம் எதுவும் இல்லை- என்றார். (அ)

# இம்மாத இறுதிக்குள் எம் மக்களுக்கு காணி உரிமை நிச்சயம் கிடைக்கும்!

## ஜீவன் தொண்டமான் உறுதி

கொழும்பு, மே. 02

எமது மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நாம் நில உரிமையற்ற சமூகமாக இருக்கிறோம். இந்த மாத இறுதிக்குள் எமது மக்களுக்கு காணி உரிமை நிச்சயம் கிடைக்குமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை பொது மைதானத்தில் நேற்று புதன்கிழமை முற்பகல் இடம்பெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆறுமுகன் தொண்டமான் மறைந்த பின்னர் எம்மால் மேதினக் கூட்டம் நடத்த முடியவில்லை.

கொரோனா,பொருளாதார நெருக்கடி என்பவற்றை எதிர்கொள்ள நேரிட்டது. இதனால் முடிந்து விட்டதா என கேள்வி எழுப்பினார்கள். 4 வருடத்தின் பின்னர் பாரிய மேதின கூட்டமொன்றை நடத்துகின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள அதிகரிப்பை பெற்றுக் கொடுப்பதாக உறுதியளித்தோம்.

அந்த வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறோம். கடந்த 4 வருடங்களாக பல்வேறு அவமானங்களையும் பிரச்னைகளையும் சந்தித்திருக்கிறோம்.

எமது மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். நாம் நில உரிமையற்ற சமூகமாக இருக்கிறோம். இந்த மாத இறுதிக்குள் எமது மக்களுக்கு காணி உரிமை நிச்சயம் கிடைக்கும்-என்றார்.

# தேசிய வளங்கள் விற்பனை எதிரணிகள் ஏன் மௌனம்?

## கேள்வி எழுப்புகிறார் எல்லே குணவன்ஸ தேரர்

கொழும்பு, மே. 02

"தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். மக்கள் தூங்கிக்கொண்டுள்ளனர் என ஆட்சியாளர்கள் நினைக்க கூடாது. அநீதிக்கு எதிராக நாம் நிச்சயம் கிளர்ந்தெழுவோம்"

-இவ்வாறு தேசிய வளங்களை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் முக்கியஸ்தரான எல்லே குணவன்ஸ தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

தேசிய வளங்கள் விற்கப்பட்டுவருகின்றன. நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு நாம் எதிர்ப்பு இல்லை. ஆனால் தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட டெலிகொம், மின்சாரம், எரிபொருள் உள்ளிட்ட நிறுவனங்கள் விற்கப்படுவதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சியை கடுமையாக எதிர்க்கின்றோம். மக்களை பணயம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட வேண்டாம் என அரசுக்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

நாடு குறித்து நாம் விழிப்பாகவே இருக்கின்றோம். தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் நீதிகோரி, அநீதிக்கு எதிராக எழுவோம் என்பதை அரசுக்கும், ஏனைய கட்சிகளுக்கும் கூறிவைக்க விரும்புகின்றோம். தேசிய வளங்கள் விற்கப்படுவதை எதிரணிகள் ஏன் எதிர்க்கவில்லை என்பது தெரியவில்லை. நாம் தற்போது மௌனம் காக்கின்றோம். உரிய நேரத்தில் எழுவோம்.

ஆட்சியாளர்களுக்கு சந்தர்ப்பம் வருவதுபோல, எமக்கும் வரும். எனவே, உரிய வகையில் அந்த சந்தர்ப்பம் பயன்படுத்தப்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறகலய மூலம் அழிக்க பார்த்தார்கள் இன்று மீண்டெழுந்துவிட்டது மொட்டு!

## பெரமுனவின் எம்.பி. பெருமிதம்

கொழும்பு, மே. 02

“அறகலய மூலம் பொதுஜன பெரமுன கட்சியை அழிக்க முற்பட்டனர். ஆனால் இருந்ததைவிடவும் ஆனால் பல மாக மீண்டெழுந்துள்ளோம். மே தினக் கூட்டத்துக்கு வந்து பார்த்தால் எம்மை அழிக்க முடியாது என்பது தெரிந்து விடும்.”

இவ்வாறு மொட்டு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

பொதுஜன பெரமுன கட்சியை அறகலயமூலம் அழிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. எமது கட்சி ஆதரவாளர்கள் பேர வாவிக்குள் தள்ளப்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். வீடுகள் தீயிட்டுக்கொளுத்தப்பட்டன. இவ்வாறு எமது கட்சியை அழிப்பதற்கு கீழ்த்தரமான அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாறு தீ வைத்தவர்கள் கெம்பல் மைதானத்துக்கு வந்து பார்த்தால் எமது கட்சியை அழிக்க முடிந்ததா என்பது தெரியவரும்-என்றார். (அ)

# தலைமன்னார் - ஊர்மனையில் சிறப்பாக நடைபெற்ற மே தினம்!

மன்னார், மே. 02

தலைமன்னார், ஊர்மனை கிராம மக்கள் இம்முறை மே தினத்தை வெகு சிறப்பாக கொண்டாடியுள்ளனர்.

குறித்த கிராம மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பொருளாதார பின்னடைவு மற்றும் இந்திய மீனவர்களின் அத்து மீறலால் ஏற்பட்ட பாதிப்புகள் உள்ளடங்கலாக பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த கிராம மக்கள் நேற்று மே தினத்தை ஒன்று திரண்டு மிகவும் ஒற்றுமையாக கொண்டாடி மகிழ்ந்து உள்ளனர்.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தின் புனித லோறன்சியார் ஆலய பங்குத்தந்தை சந்தியோகு மார்க்கஸ் அடிகளார் தலைமையில் புனித லோறன்சியார் மீனவ கூட்டுறவு சங்கம் மற்றும் லோரன்சியார் விளையாட்டு கழகம் கூட்டாக இணைந்து மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

தலைமன்னார், ஊர்மனை கிராமத்தில் மீன்பிடித்துறையில் அமைந்துள்ள சொரூபத்தடியில் நேற்று காலை மே தின கொண்டாட்ட நிகழ்வு திருப்பலியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது நீச்சல் போட்டி, தெப்பம் வலிக்கும் போட்டி, பெரிய மற்றும் சிறிய படகுகளின் போட்டி, பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி நிகழ்வுகள் இடம் பெற்றன.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தின் கடற்படையினர் மற்றும் பொலிஸ் தரப்பினர் உள்ளிட்ட பல்வேறு பிரதிநிதிகள் குறித்த நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# பருத்தித்துறையில் நடைபெற்ற ஈ.பி.டி.பியின் மே தின நிகழ்வுகள்!

வடமராட்சி, மே 02

தொழிலாளர் தினத்தினை முன்னிட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நேற்று தமது மே தின நிகழ்வு களை பருத்தித்துறையில் பிரமாண்டமான முறையில் ஏற் பாடு செய்திருந்தது.

அதனடிப்படையில் ஈ.பி.டி.பியின் இவ்வாண்டுக்கான தொழிலாளர் தினம் பருத்தித்துறை நகரில் பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் கட்சியின் ஊடக பேச்சாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தலைமை தாங்கியிருந்தார்.

முன்பதாக மேதின நிகழ்வுகளில் ஒரு அங்கமாக யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலக முன்றலிலிருந்து அழைக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களின் பிரசன்னத்துடன் வாகனப் பேரணி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதி வழியாக பருத்தித்துறை நகரை சென்றடைந் தது.



இதேநேரம் மற்றொரு வாகன பேரணி கட்சியின் சாவகச்சேரியிலுள்ள பிரதேச அலுவலக முன்றலிலிருந்து பேரெழுச்சியுடன் ஆரம்பித்து பருத்தித்துறையை நோக்கி வந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் பலநோக்கு கூட்டறவு சங்க கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் உழைப்பாளர் தின செய்தி வாசிக்கப்பட்டது டன் உறுதியும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேலும் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் தொழிலாளர் உரிமைகளை வலியுறுத்தி சிறப்புரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# மொட்டு விரைவில் வீடு செல்ல நேரிடும்!

கொழும்பு, மே. 02

ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷ தரப்பினரின் கூட்டணியில் இடம்பெறும் இறுதி மே தின நிகழ்வு இன்றாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளாவது-

இம்முறை மே தினம் வரலாற்று சிறப்புமிக்க ஒன்றாகும். ரணில் விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்ஷ தரப்பினரின் கூட்டிணைவில் இடம்பெறும் இறுதி மே தின நிகழ்வு இதுவாகும்.

எதிர்வரும் மே தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலமாகும். மக்கள் அபிமானத்தை வென்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலத்தின் இந்த நாட்டு மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படும். ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினம் இடம்பெறும் இந்த இடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

அன்று கோட்டாபய உள்ளிட்ட ராஜபக்ஷ தரப்பினரை விரட்டியடிப்பதற்கு மக்கள் வெள்ளம் அணிதிரண்ட முதலாவது இடம்.132 பேரின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவும், பொதுஜன பெரமுன எனும் கள்வர் கூட்டமும் விரைவில் வீடு செல்ல நேரிடும்-என்றார். (அ)

# ப்ளூ டூத் ஸ்பீக்கரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் கைது!

கொழும்பு, மே. 02

ப்ளூ டூத் ஸ்பீக்கரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் மட்டக்குளி பகுதியைச் சேர்ந்தவர் என்பதுடன் இவரிடமிருந்து 500 கிராம் ஐஸ் போதைப்பொருள் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர் துபாயில் மறைந்து வாழும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி ஒருவரின் நெருங்கிய உறவினர் என விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தின கூட்டம் யாழ்ப்பாணத்தில்




யாழ்ப்பாணம், மே. 02

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

நல்லூர் ஆலயத்திற்கு அருகில் இருந்து ஆரம்பித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பேரணி, நல்லூர் கிட்டு பூங்காவில் நிறைவடைந்து அங்கு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், ஆசிரியர்கள் என பலரும் இந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# பி.பி.சியில் இருந்து பணி நீக்கப்பட்ட இலங்கை ஊடகவியலாளர் அசாம்!

கொழும்பு, மே. 02

இலங்கை ஊடகவியலாளர் அசாம் அமீனுக்கு 4.5 மில்லியன் ரூபாவை நட்டஈடாக வழங்குமாறு பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு (பிபிசி) உத்தரவிடப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் அசாம் அமீனின் ஒப்பந் தத்தை முன் கூட்டியே முடிவுக்கு கொண்டு வந்த பிபிசியின் முடிவு ‘நியாயமற்றது’ என்று இலங்கை தொழிலாளர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதன்படி, ஏப்ரல் 30ஆம் திகதி எழுத்துமூர்வ உத்தரவை வழங்கிய தொழிலாளர் நீதிமன்றம், பிபிசியின் நடவடிக்கைகள் தன்னிச்சையானவை என்று கண்டறிந்தது.

பிபிசிக்கு எதிராக தீர்ப்பளித்த தொழிலாளர் நீதிமன்றம், ஊடகவியலாளர் அசாம் அமீனுக்கு 4.5 மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுடன் அசாம் அமீன் கலந்துரையாடிய குரல் பதிவு ஒன்றை சிங்களே அமைப்பு வெளியிட்டிருந்த நிலையில், அசாம் அமீன் 2020 ஆம் ஆண்டு பிபிசியில் இருந்து பதவி விலக்கப்பட்டிருந்தார்.

இதனால் ஒப்பந்தம் முன் கூட்டியே நிறுத்தப்பட்டமை நியாயமற்றது என்று அமீனின் சட்டத்தரணிகள் வாதிட்டனர். இந்த வழக்கில் உள்ள பிபிசி சார்பில் இலங்கையில் உள்ள அதன் சட்டத்தரணி கள் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

ஊடகவியலாளர் பிபிசியின் கீழ் கடந்த பத்து வருடங்களாக கறைபடாத சேவைப் பதிவைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிடுவதாகத் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

அத்துடன், குற்றம் சாட்டப்பட்ட தவறான நடத்தைக்கான காரணத்தைக் காட்ட வாய்ப்பளிக்கப்படாமல் அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும் நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஐ. பி. எல். தொடரிலிருந்து இங்கிலாந்து வீரர்கள் விலகல்

லண்டன், மே 02

ரி - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம்பெற்றுள்ள ஜாஸ் பட்லர், மொயின் அலி, ஜானி பேர்ஸ்டோ, சாம் கரண், லியாம் லிவிங்ஸ்டன், பில் சால்ட், வில் ஜேக்ஸ், ரீஸ் டாப்லி ஆகியோர் நடப்பு ஐ. பி. எல். தொடரில் பல்வேறு அணிகளுக்காக விளையாடி வருகின்றனர்.

உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னதாக இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் ரி - 20 தொடர் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் வகையில் நடப்பு ஐ. பி. எல். தொடரில் விளையாடி வரும் இங்கிலாந்து வீரர்கள் வெளியேறி தாயகம் திரும்புவார்கள் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதனால் இங்கிலாந்து வீரர்கள் ஐ. பி. எல். தொடரின் இறுதிக்கட்ட போட்டிகளில் பங்கேற்க மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மும்பையின் ஆட்டம் முடிந்தது லக்னோ அணி ஹட்ரிக் வெற்றி

லக்னோ, மே 02

145 ஓட்டங்களுக்குள் மும்பை அணியை சுருட்டிய லக்னோ அணி இறுதி ஓவரில் போராடி வெற்றி பெற்றது.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 48 ஆவது லீக் போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் லக்னோ அணி வெற்றி பெற்றது.


லக்னோவிலுள்ள பாரத ரத்னா அடல் பிஹாரி வாஜ்பாய் ஏகானா கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடந்தது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணி முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது. மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 144 ஓட்டங்கள் எடுத்தது.

145 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை லக்னோ விரட்டியது.

மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் 45 பந்துகளில் 62 ஓட்டங்கள் எடுத்தார். இந்தப் போட்டியில் ஒருவர் எடுத்த அதிகப்படியான ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். லக்னோ அணியின் வெற்றிக்கு கடைசி 5 ஓவர்களில் 29 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 16 மற்றும் 17 ஆவது ஓவரில் முறையே 6 மற்றும் ஓர் ஓட்டம் எடுக்கப்பட்டது.

இறுதி 12 பந்துகளில் 13 ஓட்டங்கள் லக்னோவின் வெற்றிக்குத் தேவைப்பட்டது.

19 ஆவது ஓவரின் முதல் பந்தில் ஆயுஷ் பதோனி ஆட்டமிழந்தார். அது லக்னோ அணிக்கு சங்கடம்



தரும் வகையில் அமைந்தது. அந்த ஓவரில் 10 ஓட்டங்கள் எடுத்தது லக்னோ.

கடைசி ஓவரில் 3 ஓட்டங்கள் லக்னோவின் வெற்றிக்குத் தேவைப்பட்டது. அந்த ஓவரை நபி வீசினார். முதல் 2 பந்துகளில் 3 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது லக்னோ. 19. 2 பந்துகளில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்தது லக்னோ. மும்பை அணிக்கு ஹட்ரிக் தோல்வியாக இது அமைந்தது.

இந்த வெற்றியின் மூலம் புள்ளிகள் பட்டியலில் 3 ஆவது இடத்துக்கு லக்னோ முன்னேறியது. 10 போட்டிகளில் விளையாடி 6 வெற்றிகளின் மூலம் 12 புள்ளிகளுடன் அந்த அணி உள்ளது. முதல் இடத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி உள்ளது. (எ)

# ஆயுஷ் பதோனி ஆட்டமிழப்பு?

## விமர்சனத்துக்குள்ளான மூன்றாவது நடுவரின் முடிவு

லக்னோ, மே 02


லக்னோ அணியின் ஆயுஷ் பதோனி ஓட்டம் எடுக்க முற்பட்டபோது மும்பை அணியின் விக்கெட் காப்பாளர் இஷான் கிஷன் ஆட்டமிழக்கச் செய்தார். இதனை மூன்றாவது நடுவர் அறிவித்தார். இந்த சூழலில் நடுவரின் முடிவு விமர்சனத்துக்குள்ளான வகையில் அமைந்துள்ளதாக பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

செவ்வாய்க்கிழமை இரவு இரு அணிகளும் லக்னோவில் விளையாடின. இதில் லக்னோ அணி இலக்கை விரட்டியது. கடைசி இரண்டு ஓவர்களில் அந்த அணியின் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 19 ஆவது ஓவரை ஹர்திக் பாண்டியா வீசினார்.

முதல் பந்தை எதிர்கொண்ட லக்னோ வீரர் பதோனி, இரண்டு ஓட்டங்கள் எடுக்க முயற்சித்தார். முதல் ஓட்டத்தை எடுத்த அவர், இரண்டாவது ஓட்டத்தை எடுக்க முயன்ற போது ஆட்டமிழந்தார்.

மும்பை வீரர் நமன் திர், பந்தை தடுத்து, விக்கெட் காப்பாளர் கிஷனிடம் கொடுத்தார். அதை சரியாக பிடித்த கிஷன் முதல் முறையில் விக்கெட்டை தகர்க்க தவறினார். இருந்தும் இரண்டாவது வாய்ப்பில் அதை செய்தார். அதற்குள் பதோனி கிரிஸ் லைனை கடக்க முயன்றார்.

அது குறித்த முடிவை எடுக்க மூன்றாவது நடுவரை அணுகினர் கள நடுவர்கள். ரிவி ரீப்ளேயில் கிரிஸ்



லைனை பதோனி கடந்த போது, அவரது துடுப்பாட்ட மட்டை தரையில் படாதது போல இருந்தது. அதை காரணம் காட்டி ஆட்டமிழப்பு கொடுத்தார் மூன்றாவது நடுவர்.

மூன்றாவது நடுவரின் இந்த முடிவு களத்திலிருந்த பதோனி, லக்னோ அணியின் பயிற்சியாளர் ஜஸ்டின் லாங்கர், அந்த அணியின் தலைவர் கே. எல். ராகுல் மற்றும் இரசிகர்களுக்கு அதிருப்தியை தந்தது. அதே நேரத்தில் துடுப்பாட்ட மட்டை தரையில் படவில்லை என்றும் ஒரு சிலர் கருத்து தெரிவித்தனர். இந்த சூழலில் 4 பந்துகள் எஞ்சியிருக்க ஆட்டத்தில் வெற்றி பெற்றது லக்னோ அணி. (எ)

## தென் ஆபிரிக்க அணியில் புதிய வீரர்களுக்கு வாய்ப்பு

ஜொகனஸ்பேக், மே 02

ஐ. சி. சி. ரி - 20 கிரிக்கெட் தொடருக்கான தென் ஆபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. எய்டன் மார்க்ரம் அணித் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். துடுப்பாட்ட வீரர் ரியான் ரிக்கெல்டன், வேகப்பந்து வீச்சாளர் ஓட்னியல் பார்ட்மேன் ஆகிய புதுமுகங்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குயிண்டன் டி கொக், ரீசா ஹென்ட்ரிக்ஸ், ஹென்ரிக் கிளாசன், டேவிட் மில்லர் ஆகியோருடன் டிரிஸ்டன் ஸ்டப்ஸும் இடம்பெற்றுள்ளார். வேகப்பந்து வீச்சில் ககிசோ ரபாடாவுடன், அன்ரிச் நோர்க்கியா அணிக்குத் திரும்பியுள்ளார்.

இவர்களுடன் மார்க்கோ யான்சன், ஜெரால்ட் கோட்ஸி ஆகியோரும் வேகப்பந்து வீச்சாளர்களாக அணியில் உள்ளனர்.

சுழற்பந்து வீச்சாளர்களாக ஜோர்ன் ஃபோர்டுயின், கேஷவ் மகாராஜ், தப்ரைஸ் ஷம்சி ஆகிய 3 பேர் இடம்பெற்றுள்ளனர். மாற்று வீரர்களாக வேகப்பந்து வீச்சாளர்களான நான்ரே பர்கர், லுங்கி நிகிடி சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# கோஷ்டிகளால் மும்பை அணியில் பிளவு

## மைக்கேல் கிளார்க் அடுக்கும் காரணங்கள்

மும்பை, மே 02

எப்போது குஜராத் டைட்டன்ஸ் அணியிலிருந்து ஹர்திக் பாண்டியா மும்பை இந்தியன்ஸுக்கு வந்தாரோ, அதுவும் அணித் தலைவரானாரோ அது முதல் அவருக்கு செல்லும் இடமெல்லாம் அவப்பெயர் வந்து கொண்டிருக்கிறது. மும்பையிலும் ஆதரவு இல்லை. அகமதாபாத் சென்றாலும் எதிர்ப்பு குறையவில்லை. இதன் பின்னணியில் மும்பை இந்தியன்ஸ் அணியிலேயே கோஷ்டிகள் உள்ளன என்று அவுஸ்திரேலியாவின் முன்னாள் அணித் தலைவர் மைக்கேல் கிளார்க் பகீர் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஐ. பி. எல். 2024 அட்டவணையில் 9 ஆவது இடத்தில் உள்ளது மும்பை இந்தியன்ஸ். இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மைக்கல் கிளார்க் "இந்த ஒட்டுமொத்த ஐ. பி. எல். தொடருமே மும்பை இந்தியன்ஸ் அணியைப் பொறுத்தவரை அவரவர் சொந்த விருப்பங்களுக்கேற்ப நடக்கிறதேயன்றி அணியாகத் திரண்டு ஆடவில்லை.

நாம் வெளியே பார்ப்பதை விட அதிகமாக ஒய்வறையில் ஏதோ சிக்கல்கள் இருந்து கொண்டிருக்கிறது போல் தெரிகிறது. இல்லையெனில், இத்தனை நல்ல



வீரர்களை வைத்துக் கொண்டு இவ்வளவு மோசமாக ஆட முடியுமா?. ஓய்வறையில் வீரர்களிடையே கோஷ்டிப் பிளவு இருப்பதாகவே தெரிகிறது. அவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. சேர்ந்து ஆட முடியாமல் ஏனோ தானோவென்று ஆடி வருகின்றனர்.

தனிப்பட்ட வீரரின் சிறப்பான ஆட்டம் அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தரலாம். ரோஹித் சர்மா இன்னொரு சதம் அல்லது ஹர்திக் பாண்டியாவின் சதம், அல்லது பும்ரா வந்து பயங்கரமாக வீசுவது என்று ஏதாவது தனிப்பட்ட வீரர்களின் திறமையால் ஏதாவது அங்கு நடந்தால் தான் உண்டு என்கிற அளவில் தான் மும்பை அணி வென்றது. (எ)

# உலகக் கிண்ண இந்திய அணியில் ஷிவம் துபே, ஹர்திக் பாண்டியா



மும்பை, மே 02

ஐ. சி. சி. ரி - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் ஷிவம் துபே சேர்க்கப்பட்டுள்ளார். ஐ. பி. எல். தொடரில் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டுள்ள சகல துறை வீரர் ஹர்திக் பாண்டியாவும் அணியில் இணைக்கப்பட்டுள்ளார். அதேவேளை கே. எல். ராகுல் சேர்க்கப்படவில்லை. விக்கெட் காப்பாளர் - துடுப்பாட்ட வீரர்களாக ரிஷப் பண்ட், சஞ்சு சாம்சன் இடம்பெற்றுள்ளனர்.

ரோஹித் சர்மா, விராட் கோலி, யஷஸ்வி ஜெய்ஸ்வால், சூர்யகுமார் யாதவ்,

ரவீந்திர ஜடேஜா, அக்சர் படேல், குல்தீப் யாதவ், யுவேந்திர சாஹல், ஜஸ்பிரீத் பும்ரா, முகமது சிராஜ், அர்ஷ்தீப் சிங் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஷுப்மன் கில், ரிங்கு சிங், கலீல் அகமது, அவேஷ் கான் ஆகியோர் மாற்று வீரர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுநோய் கள ஆய்வு நான்கு பேர் கண்டுபிடிப்பு



அம்பாறை, மே. 02

**காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் வெட்டு வாய்க்கால் பகுதியில் தொழுநோய் கள ஆய்வு நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்டது.**

காரைதீவு சுகாதார உணவு அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீர் தலைமையிலான சுகாதார குழுவினர் அப்பகுதியில் வீடு வீடாக விஜயம் செய்து ஆய்வு செய்தனர்.

இதில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தொழுநோய் கட்டுப்பாட்டுகள் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது ஏலவே இனங் காணப்பட்ட நான்கு தொழு நோயாளர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குவதற்கான நடவடிக்கையும் ஆலோ சனையும் மேற்கொள்ளப்பட்டது.

அவர்கள் உரிய சிகிச்சை பெறாமல் இருந்து வந்தமை அவதானிக் கப்பட்டது.

(அ)

# நிந்தவூர் தொழிற்பயிற்சி நிலைய பயிலுநர்களுக்கு நுகர்வோர் விவகார விழிப்புணர்வு கருத்தரங்கு

அம்பாறை, மே. 02

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நிந்தவூர் மாவட்ட தொழிற் பயிற்சி நிலையத்தின் பயிலுனர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த செவ்வாய்க்கிழமை தொழிற் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட தொழிற்ப யிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி எஸ்.அப்துல் நாஸர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நூகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளான இஷட்.எம். ஸாஜீத் மற்றும் என்.எம். நூஸ்கி ஆகியோர் கலந்து கொண்டு வியாபார நடவடிக்கைகளில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து பயிலுநர்களுக்கு தெளிவுபடுத்தினர்.



இதன்போது பாவனையாளர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள், தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை, நுகர்வோர் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் மற்றும் முறைப்பாடு செய்வது சம்மந்தமாக தெளிவுபடுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் தொழிற் பயிற்சி நிலையத்தின் விரிவுரையாளர்கள் சிலரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். (அ-6)

# அலிசாஹிர் மௌலானாவுடன் பிரித்தானிய தூதுவர் சந்திப்பு



மட்டக்களப்பு, மே. 02

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த பிரித்தானிய வுதூதுவர் அன்ரு பற்றிக் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானாவுடன் விசேட சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இச்சந்திப்பு ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர் கொள்ளும் பல்வேறு சவால்கள், விவசாயம், மீன்பிடி மற்றும் குடியிருப்புக் காணி உள்ளிட்ட பல விவகாரங்களில் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் போன்றவை நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா முஸ்லிம் சமூகத்தின் சார்பில் பிரித்தானிய தூதுவரிடம் எடுத்து கூறினார்.

முஸ்லிம்களின் இன விகிதாசாரத்திற்கு ஏற்ப காணி பகிர்வு இடம்பெறாமல் பெரும் அநீதி இழைக்கப்படுவதாகவும்,பல பகுதிகளில் பாதுகாப்பு தரப்பினர் தம் வசம் உள்ள பொது மற்றும் தனியார் காணிகளை இணக்க அடிப்படையில் விடுவிக்கும் நிலையில் எதிர்கால சந்ததிகளான பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பெரும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டி உள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

கல்குடா தேர்தல் தொகுதியில் கோறளை மத்தி செயலகப் பிரிவு முதலான பகுதிகளில் எல்லை நிர்ணயம், காணி விவகாரம் தொடர்பாக பனம்பலம ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட விடயங்கள் கூட பல வருடங்கள் கடந்தும் அமுல் படுத்தபடாமல் கல்குடா முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப் பட்டு வருகிறது.

கோறளைபற்று மத்தி பிரதேச செயலகப்பிரிவில் 11 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளிடக்கி அது உருவாக்கப்பட்ட போதிலும் ஐந்து கிராம சேவகர் பிரிவுகள் மாத்திரமே அந்த செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

கோறளை மத்தி செயலகப் பிரிவிற்கு சுமார் 240 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதையும் அலி ஸாஹிர் மௌலானா எடுத்துக் கூறினார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு மூளை சலவை செய்து சில இழிவான முஸ்லிம் பெயர்தாங்கி பிறவிகள் பயன்படுத்தப்பட்ட விவகாரத்தில் முழு முஸ்லிம் சமூகமும் கண்டனத்தையும் கவலையையும் வெளியிட்டு வருவதுடன் இது தொடர்பில் நீதியான விசாரணை மற்றும் குற்றவாளிகள் அடையாளப்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவது தொடர்பான சமூக நிலைப் பாட்டை இங்கு விளக்கினார்.

அத்துடன் இந்த இழி செயலில் ஈடுபட்டவர்களை அடிப் படை காரணங்கள் இன்றி தொடர்புபடுத்தி காத்தான்குடி பிரதேசத்தில் சமூக மற்றும் மார்க்க விடயங்களில் ஈடுபட்டு வந்த ஒரு பள்ளிவாசல் மூடப் பட்டு இருப்பது தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா இங்கு பிரத்தானிய தூதுவர் அன்ட்ரூ பற்றிக் அவர்களிடம் விரிவாக எடுத்து கூறினார்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சவால்கள், அநீதிகள் தொடர்பில் விரிவாக தெளிவு படுத்திய பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா ஏறாவூர் நகர சபையின் திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்பாட்டில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் தெளிவுபடுத்தி இதற்கான மனிதாபிமான உதவிகளை பிரித்தானிய அரசு கவனத்தில் கொண்டு முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரி நகர சபை செயலாளர் மூலமாக மகஜர் ஒன்றினையும் கையளிப்பு செய்தார்.

இவ்விடயங்களை மிக அவதானமாக கேட்டறிந்து கொண்ட தூதுவர் அன்று பற்றிக் தன்னிடம் முன் வைக்கப்பட்ட விடயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாகவும் அழுத்தங்களை வழங்குவதாகவும் தெரிவித்தார். (அ)

# ரிஷாத் பதியுதீனுடன் இந்திய தூதர் சந்திப்பு!

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் ஆராய்வு



அம்பாறை, மே. 02

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு இடையில் விசேட சந்திப்பொன்று இந்திய தூதரகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின் போது, பொருளாதார நெருக்கடியில் இலங்கை மூழ்கியிருந்த காலகட்டத்தில், இந்தியா வழங்கிய விலைமதிப்பற்ற ஆதரவிற்கு மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்ததுடன், வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50,000 வீடுகளை வழங்கியமைக்காகவும் அவர் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

மேலும், கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக நிந்தவூர், ஒலுவில், காரைதீவு, மாளிகைக்காடு, சாய்ந்தமருது பாண்டிருப்பு, மருதமுனை மற்றும் கல்முனை போன்ற பிரதேசங்களில், அதிகரித்து வரும் கடலரிப்பினால், பாதிக்கப்பட்ட மீனவர்கள் எதிர் நோக்கும் சவால்களுக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டிய தன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்ததுடன், எதிர்வரும் நாட்களில் கிழக்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம், குறித்த விடயங்களை கருத்திற் கொண்டு, மேற்படி பிரதேசங்களில் கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் தேவையான உதவிகளை, இந்திய அரசின் நிதி பங்களிப்பினூடாக பெற்றுத்தருமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், வடக்கில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிலையான வாழ்வாதார வசதிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், இந்த இலக்கை அடைவதற்கு இந்திய அரசின் உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நெருக்கமான உறவுகளை வலுப்படுத்துவதையும் பரஸ்பர ஒத்துழைப்பை பேணுவதையும் நோக்காகக் கொண்ட இக்கலந்துரையாடலில், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையை மீள ஆரம்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களின் அபிவிருத்தி உள்ளிட்ட இன்னும் பல முக்கிய விடயங்கள் தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப் பட்டது.


இந்த சந்திப்பின் போது, மக்கள் காங்கிரஸ் தவிசாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி அவர்களும் கலந்துகொண்டு, மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்திகள் சம்பந்தமாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்திருந்தமையும் குறிப் பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க கொடியை அகற்றி பலஸ்தீன கொடியை ஏற்றிய போராட்டக்காரர்கள்

# கொலம்பியாவில் கொதிநிலை பல்கலை. மாணவர்கள் கைது!

கொலம்பியா, மே. 02

**இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக் கழகத்தின் பிரதான கட்டடத்தை கைப்பற்றி போராட்டம் நடத்திய மாணவர்களை நியூயோர்க் பொலிஸார் அதிரடியாகக் கைது செய்தனர். இதனால் அமெரிக்காவில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது.**

காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் போரை நிறுத்தக் கோரி அமெரிக்கா முழுவதும் பல்வேறு முக்கிய பல்கலைக்கழகங்களில் கடந்த சில நாட்களாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நியூயோர்க்கின் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த இந்தப் போராட்டம் பல பல்கலைக் கழகங்களுக்கும் பரவியது.

அமெரிக்காவின் சிகாகோ, பிரான்சிஸ்கோ, நியூயோர்க், கலிபோர்னியா உள்ளிட்ட நகரங்களிலுள்ள முக்கிய பல்கலைக் கழகங்களான கொலம்பியா, ஹார்வர்ட், யேல், ஐவி லீக் ஸ்கூல், தெற்கு கலிபோர்னியா, டெக்சாஸ் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த இரண்டு வாரங்களாக உள்ளிருப்பு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

காஸாவுக்கு ஆதரவாக கூடாரங்கள் அமைத்துப் போராடுதல் என்ற தலைப்பில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மாணவர்கள் பலஸ்தீன ஆதரவுக் கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என மாணவர்கள் வலியுறுத்தினர்.


இந்நிலையில் செவ்வாய்க் கிழமை அதிகாலை இந்தப் போராட்டம் தீவிரமடைந்தது. மாணவர்கள் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பிரதான கட்டடத்தைக் கைப்பற்றி பொலிஸார் நுழைய முடியாதவாறு தடுப்புகளை ஏற்படுத்தினர். பல்கலைக்கழக நிர்வாகத்தின் எச்சரிக்கையையும் மீறி மாணவர்களின் போராட்டம் தொடர்ந்தது. அவர்களின் போராட்டத்தை கலைக்க நியூயோர்க் பொலிஸார் முயற்சி மேற்கொண்டதைத் தொடர்ந்து கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பிரதான கட்டடமான ஹாமில்டன் அரங்கை கைப்பற்றினர். மேலும், அங்கு பறக்கவிடப்பட்டிருந்த அமெரிக்கக் கொடியை அகற்றி பலஸ்தீன கொடியை பறக்கவிட்டு பரபரப்பை ஏற்படுத்தினர்.

நீண்ட நேரம் தொடர்ந்த இந்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர நியூயோர்க் பொலிஸார் கடும் முயற்சி மேற்கொண்டனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை இரவு 9 மணியளவில் ஹாமில்டன் அரங்கின் இரண்டாவது மாடியின் ஜன்னல்களை உடைத்து உள்ளே நுழைந்து மாணவர்களை அதிரடியாகக் கைது செய்தனர்.

மாணவர்களின் கைகளை கட்டி ஒவ்வொருவராக மாடியிலிருந்து கீழே இறக்கிய பொலிஸார் தங்களின் வாகனங்களில் கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லும்போது பலஸ்தீனம் குறித்த முழக்கங்களை மாணவர்கள் எழுப்பினர். மாணவர்கள் கைதை அடுத்து, கொலம்பியா பல்கலைக்கழகம் முழுவதும் நியூயோர்க் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இதேபோன்று அமெரிக்காவின் பிற பல்கலைக்கழகங்களிலும் மாணவர்களின் போராட்டத்தை முற்றிலும் முடிவுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்க அரசு துரிதப்படுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் அமெரிக்காவில் கடும் பதற்றம் நிலவி வருகிறது. (எ)



# இந்தியா வல்லரசாக முயல்கிறது; பாகிஸ்தானோ பிச்சை எடுக்கிறது

## அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் வேதனை

இஸ்லாமாபாத், மே. 02

இந்தியா எப்படியாவது வல்லரசு நாடாக வேண்டும் என்று முயல்கிறது. ஆனால் நம் நாடு பிச்சை எடுக்கிறது என்று பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் மௌலானா ஃபஸ்லுர் ரஹ்மான் வேதனை வெளியிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடியும் அரசியல் குழப்பமும் நீடித்து வருகிறது. இந்நிலையில், இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒப்பிட்டு அந்நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் பேசியிருப்பது கவனத்தை ஈர்த்துள்ளது.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் வலதுசாரி கட்சியான ஜமியத் உலமா - இ - இஸ்லாம் ஃபஸ்லின் தலைவர் மௌலானா ஃபஸ்லுர் ரஹ்மான் உரையாற்றுகையில், "1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரமடைந்தன. ஆனால், இன்று இந்தியா வல்லரசாக மாற இலக்கு நிர்ணயித்து பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், பாகிஸ்தான் திவால் ஆவதைத் தடுக்க பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறது.

இந்தியா வலுவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்டிருக்கிறது. 2024 - 25 நிதி ஆண்டில் 7 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் பாகிஸ்தானைப் பாருங்கள். பாகிஸ்தானில் வளர்ச்சியே இல்லை. தேக்கம் தான் இருக்கிறது.

சில சக்திகள் நம் வளர்ச்சியைத் தடுத்துக் கொண்டிருக்கின்றன. அவைதான் அனைத்து முடிவுகளையும் எடுக்கின்றன. அரசியல்தலைவர்களான நாம் பொம்மை போல் இருக்கிறோம். எதிர்க்கட்சிகளுக்கு போராட்டம் நடத்த உரிமையிருக்கிறது. அவற்றால் அரசையும் அமைக்க முடியும்" - என்றார். (எ)

# ஹமாஸை அழிக்க ரபா மீது இஸ்ரேல் படையெடுக்கும்

## பிரதமர் நெதன்யாகு சபதம்

ஜெருசலேம், மே 02

ஹமாஸ் பயங்கரவாதிகளை முற்றிலும் அழித்து ஒழிக்க ரபா நகரின் மீது இஸ்ரேல் இராணுவம் நிச்சயம் படையெடுக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே சுமார் 7 மாதங்களாக மோதல் நீடித்து வருகிறது. காஸா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 34 ஆயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். இதனிடையே இரு தரப்பினருக்கும் இடையே போர் நிறுத்தம் மற்றும் அசதிகளை விடுவிப்பது தொடர்பில் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேசமயம் ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் அழிக்கப்போவதாகக் கூறி உக்கிரமான தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல், தனது இலக்கின் இறுதிக்கட்டமாக ரபா நகரை குறிவைத்துள்ளது. ரபா நகரில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் அடைக்கலம் புகுந்துள்ள நிலையில், அங்கு இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தினால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது.



இந்த நிலையில் ஹமாஸ் அமைப்பை முற்றிலுமாக அழிக்க ரபா நகரின் மீது இஸ்ரேல் இராணுவம் நிச்சயமாக படையெடுக்கும். - என்றார் நெதன்யாகு. ரபா நகரில் தான் ஹமாஸ் அமைப்பினர் முகாமிட்டு தாக்குதல் நடத்தி வருவதாகவும், போரில் முழு வெற்றியை பெற்றே தீருவோம் எனவும் நெதன்யாகு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# 4 மாதத்தில் 40 இலட்சம் பேர் டெங்கு நோயினால் பாதிப்பு

## 2000 பேர் உயிரிழப்பு

பிரேசிலியா, மே. 02

தென் அமெரிக்க நாடான பிரேசிலில் கடந்த 4 மாதங்களில் 40 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 10 இலட்சம் பேருக்கு டெங்கு நோய் பரவிய நிலையில் தற்போது 4 மடங்கு அதிகரித்துள்ளது.

மேலும், இவர்களில் சுமார் 2 ஆயிரம் பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். எனவே, டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பொதுமக்களுக்குத் தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் டெங்கு நோயினால் 1,937 பேர் உயிரிழந்ததாகவும், 2,345 டெங்கு மரணங்கள் சந்தேகத்தின் பேரில் விசாரணையில் இருப்பதாகவும் பிரேசில் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு காலநிலை மாற்றம் மற்றும் டெங்கு பல சுழற்சி போன்ற காரணிகளால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வீதியில் திடீரென தோன்றிய பள்ளத்தில் சிக்கி 19 பேர் பலி

பீஜிங், மே 02

சீனாவில் வீதியில் ஏற்பட்ட திடீர் பள்ளத்தால் 184. 3 சதுர மீற்றர் அளவை கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு சீனாவின் குவாங்டாங் மாகாணத்திலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை 2. 10 மணியளவில் திடீரென பள்ளம் ஏற்பட்டது.

இதையடுத்து அந்த வீதியில் சென்று கொண்டிருந்த 18 வாகனங்கள் அடுத்தடுத்து பள்ளத்தில் சிக்கின. இந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் பற்றி பொலிஸார் மாற்றும் மீட்புப்படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த 500 இற்கும் மேற்பட்ட மீட்புப் படையினர் பள்ளத்தில் காயங்களுடன் கிடந்த 30



பேரை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த பள்ளமானது 184.3 சதுர மீற்றர் அளவை கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பள்ளத்தால் அப்பகுதியில் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி மூலம் ஆபாச உரையாடல்

# இலங்கையைச் சேர்ந்த நபருக்கு ஆஸியில் இரண்டு வருடச் சிறை!

கான்பரா, மே. 02

**அவுஸ்திரேலியாவில் தொலைபேசி மூலம் ஆபாச உரையாடல்களில் ஈடுபட்ட இலங்கையை சேர்ந்த நபர் ஒருவருக்கு நீதிமன்றம் இரண்டு வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.**

56 வயதான ஜெராட் சிசில் வாமதேவன் என்ற இலங்கையருக்கே அவுஸ்திரேலிய நீதிமன்றம் இந்த தண்டனை வழங்கியுள்ளது.

இவர் தன்னை தொலைக்காட்சி ஒன்றின் அதிகாரி என பொய்யான தகவல்களை தெரிவித்து பலரை ஏமாற்றியுள்ளார்.

2018 முதல் 2022 ஜனவரி 22ம் திகதி வரை இவர் 18 பெண்களுடன் தொடர்பு கொண்டு தகாத முறையில் உரையாடியதாக பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

தன்னை சனல் 7 தொலைக்காட்சியின் திறமையாளிகளை தேடும் நபர் என அடையாளப்படுத்திய நிலையில், பெண் ஒருவரை தொடர்பு கொண்டுள்ளார்.


தாய் ஒருவரை தொலைபேசியில் தொடர்புகொண்ட இந்த நபர் மகளை துஷ்பிரயோகம் செய்து துண்டுதுண்டாக வெட்டிக்கொள்வேன் என அச்சுறுத்தியுள்ளார்.

இதேவேளை பாதிக்கப்பட்ட நபர்கள் தங்களை தொலைபேசியில் தொடர்புகொண்ட வாமதேவன் இழிவான மோசமான தகாத ரீதியிலான உரையாடலில் ஈடுபட்டார் என தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஒருவர், வாமதேவன் தன்னை தொலைபேசியில் அழைக்க தொடங்கியதும் பொலிஸாரை தொடர்பு கொண்டுள்ளார்.

பாடகியாக வர விரும்பும் தனது மகளிற்காக தான் தயாரித்த சுயவிபரக் கோவையிலுள்ள தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி வாமதேவன் தன்னை தொடர்புகொண்டார் என அந்த பெண் தெரிவித்துள்ளார்.

2020 செப்டம்பர் முதல் 2021 ஜனவரி வரை வாமதேவன் அந்த பெண்ணை தொலைபேசியில் தொடர்புகொண்டு தகாத உரையாடல்களில் ஈடுபட்டார் தன்னை யார் என்பதை தெரிவிக்கவில்லை என அந்த பெண் தெரிவித்துள்ளார். (அ)



# வெற்று காணிக்குள் மூன்று வாள்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், மே. 02

உரும்பிராய் பகுதியில் உள்ள வெற்று காணிக்குள் இருந்து மூன்று வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த காணிக்கு சென்ற பொலிஸார் மூன்று வாள்களையும் மீட்டு சென்றுள்ளனர்.

வாள்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில், அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க கோரிக்கை!

மன்னார், மே. 02

மன்னார். கட்டுக்கரைக் குளப் பகுதியில் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கட்டுக்கரை குள திட்டமிடல் முகாமைத்துவ குழுவின் தலைவர் எம். சந்தாம்பிள்ளை சில்வா தெரிவித்துள்ளார்.

குளத்தின் படுக்கையில் உள்ள காடுகள் அழிக்கப்படுவதனால் மாவட்டத்தின் சூழல் பாதிப்பு ஏற்படுவதோடு, மழைவீழ்ச்சியும் குறைவடைகின்றது. எனவே இக் காணிகளை மீட்டுக் கொள்ள அனைத்து திணைக்களங்களும், மாவட்டத்தில் உள்ள பொது நிறுவனங்களும் இணைந்து துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து அரசு முறையாக பதிலளிக்கவில்லை

## டிலான் பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 02

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்வைத்த கேள்விகளுக்கு அரசாங்கம் முறையாக பதிலளிக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன், விசாரணைகள் தொடர்பில் கத்தோலிக்க சபைக்கு மட்டுமல்ல நாட்டு மக்களுக்கும் நம்பிக்கையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மூன்று நாள் சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அரசாங்கம் முறையாக பதிலளிக்கவில்லை என்பதுடன், குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை தொடர்பில் பாரிய சந்தேகம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



மேலும், நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் குண்டுத்தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் ஒரு விதமாகவும், பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பிறிதொரு எண்ணிக்கை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்பில் ஆளும் தரப்பினர் முறையற்ற கருத்துக்களை குறிப்பிடுவதாகவும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட கோட்டபய ராஜபக்ஷ உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதலின் உண்மையை பகிரங்கப்படுத்துவதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதாகவும் கத்தோலிக்க சபைக்கு வாக்குறுதி வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதியை கோட்டபய ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அரசாங்கமும் நிறைவேற்றவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா மேலும் தெரிவித்தார். (அ)

# அதிகாரிகள் போல் நடித்த நால்வர் விளக்கமறியலில்

கொழும்பு, மே. 02

கொழும்பு - கொள்ளுபிட்டி பகுதியில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் போல் நடித்து ஒரு கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் இந்த சந்தேகநபர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (எ)

# எந்தவோர் அரசியல் கட்சிக்கும் நான் ஆதரவு தெரிவிக்கவில்லை

## கூறுகின்றார் பேராயர் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, மே. 02

தான் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஆதரவு தெரிவிக்கவில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சமீபத்தில் இடம்பெற்ற பாராளுமன்ற விவாதத்தின் போது கர்தினால் மல்கம் ரஞ்சித் எதிர்வரும் ஜனாதிபதித தேர்தலில் பொதுமக்கள் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும் என தெரிவிக்கும் வகையில் செயல்படுகின்றார் என குற்றச்சாட்டுகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே கர்தினால் மல்கம் ரஞ்சித் குறித்த குற்றச்சாட்டை நிராகரித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு ஆதரவை தெரிவிக்கும் விதத்தில் அல்லது பொதுமக்களின் ஆதரவை பெற்றுக்கொடுக்கும் விதத்தில் தான் கருத்துத் தெரிவிக்கவில்லை என குறிப்பிட்டுள்ள கர்தினால் மல்கம் ரஞ்சித், அரசியல்வாதிகள் வெளியிட்டுள்ள அறிக்கைகளை கண்டித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் இவ்வாறான அறிக்கைகள் மக்களை தவறாக வழிநடத்தலாம் என தெரிவித்துள்ள அவர், பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறான ஆதாரமற்ற அறிக்கைகளை தவிர்த்துக்கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்ற சிறப்புரிமைகளால் பாதுகாக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தன்னை விமர்சிக்ககூடாது என தெரிவித்துள்ள மல்கம் ரஞ்சித், சில தனிநபர்களின் அறிக்கைகளால் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

# நிதி இராஜாங்க அமைச்சர் ஜோர்ஜியாவுக்கு விஜயம்!

கொழும்பு, மே. 02

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஜோர்ஜியா சென்றுள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாடு இன்று முதல் எதிர்வரும் 05 ஆம் திகதி வரை ஜோர்ஜியாவின் தலைநகர் டிபிலிசியில் நடைபெறவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உறுப்பினரான இலங்கை தனது நிதி வசதிகள் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான ஆதரவைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த மாநாடு ஏனைய உறுப்பு நாடுகளுடன் கூட்டுறவை ஏற்படுத்துவதற்கான சிறந்தவாய்ப்பாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயதாஸவே...

இருந்துவிட்டேன். இன்னொரு தடவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க மாட்டேன் என நான் பதவியேற்றபோதே தெரிவித்திருந்தேன். தற்போது விஜயதாஸ ராஜபக்ஷ மீது தான் பலரும் நம்பிக்கை வைத்துள்ளார்கள். அவர்தான் வேட்பாளராக எமது கட்சி சார்பாக களமிறங்குவார்.

எமது தரப்பிலிருந்து 11 பேர் அரசாங்கத்துக்குச் சென்றார்கள். நாம் ஒரே ஒருவரை தான் எமது பக்கம் எடுத்தோம். எனவே, விஜயதாஸ ராஜபக்ஷவுக்கான முழுமையான ஆதரவை நாம் வழங்குவோம் - என்றார்.

கொழும்பில் நடந்த நிகழ்வு ஒன்றில் மைத்திரிபால இந்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார். இதன் பின்னர், மாலையில் கம்பஹாவில் நடந்த சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் விஜயதாஸ ராஜபக்ஷ பங்கேற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-எ)

## வட,கிழக்கில்...

பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அந்தக் கட்சியின் மே தின பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

நாட்டின் பொருளாதார வங்குரோத்துக்குக் காரணமாக அமைந்த தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வுகாண தவறியமையும் அநாவசியமாக பல்லாண்டுகாலமாக ஒரு யுத்ததை நடத்தியமையும் - அந்த யுத்தத்தை நடத்துவதற்கு அரசாங்கம் உருவாக்கிய பயங்கரவாத தடைச் சட்டம் யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கழிந்த பின்னரும் இன்னமும் நடைமுறையில் இருப்பதானது மக்களின் அடிப்படை உரிமைகளை தொடர்ந்தும் மீறும் ஒரு செயல்பாடாகும்.

இதேபோல், யுத்தத்தால் காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் தொடர்பாக அரசாங்கம் எந்தவித காத்திரமான நடவடிக்கைகளை எடுக்காமை மிகுந்த விசனத்தை ஏற்படுத்துவதுடன் அரசாங்கத்தின் தமிழர் விரோத போக்கையும் வெளிக்காட்டி நிற்கின்றது. இந்த விடயங்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும்.

இந்திய - இலங்கை மீனவர்களின் பிரச்னைகளுக்கு இரு அரசுகளும் இணைந்து உடனடித் தீர்வு காண வேண்டும். விவசாயிகளின் கடன்கள் இரத்துச் செய்யப்பட வேண்டும். மக்களை சுரண்டும் நுண்நிதி கடன் நிறுவனங்களை தடை செய்ய வேண்டும். வறுமைக்கோட்டுக்குக் கீழிருக்கும் அனைவருக்கும் கல்வி, சுகாதாரம் போஷாக்கு உணவு உள்ளிட்ட தேவை களைப் பூர்த்தி செய்துகொள்ளும் வகை யில் பொதுவான பொருளாதர உதவித் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் தவறான கொள்கைகளால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது மாத்திரமல்லாமல், இலஞ்சம் ஊழல் மற்றும் நிர்வாகச் சீர்கேடு காரணமாக அரச இயந்திரமும் முற்று முழுதாக சீர்குலைந்திருக்கிறது. இவற்றுக்கு எதிரான மக்களின் குரல்களையும் தொழில்சங்கங்களின் குரல்களையும் பொது அமைப்புகளின் குரல்களையும் அடக்குவதற்காக தொடர்ச்சியாக பல்வேறு அடக்குமுறை சட்டங்கள் இயற்றப்படுகினறன.

இவற்றை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி வன்மையாகக் கண்டிப்பதுடன் தொழிற்சங்கங்களும் பொது நிறுவனங்களும் சுதந்திரமாக இயங்குவதற்கும் தமது கோரிக்கைகளுக்காக போராடுவதற்கான உரிமைகள் உத்தரவாதம் செய்யப்படவேண்டும். ஊடகத்துறையை அரசாங்கம் புதிய புதிய சட்டங்கள் ஊடாக கட்டுப்படுத்துகிறது. ஊடக அடக்குமுறை நீக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## முழுமையாக...

வார்த்தைகளை தமிழில் கூறிவிட்டு சிங்களத்தில் உரையாற்றுவது வழக்கம். இந்த நிலையில், சஜித் பிரேமதாஸ தனது உரையை தமிழில் முழுமையாக ஆற்றியிருப்பது சகலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் அவர், "மலையக மக்களுக்கு ஏனைய சமூகம் போல் சம உரிமைகள் தமது ஆட்சியில் வழங்கப்படும். தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றப்படுவார்கள்" என்ற வாக்குறுதியை வழங்கியதுடன், மலையகத் தமிழர்களின் வரலாறு, மலையகத் தமிழர்களுக்கு சிங்களத் தலைவர்கள் இழைத்த துரோகம் என்பவை தொடர்பிலும் தனது உரையில் குறிப்பிட்டார்.

## பேரெழுச்சியுடன்...

இந்த மே தின பேரணியில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன், தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்கள், யாழ். மாநாக முன்னாள் முதல்வர்களான இ. ஆனல்ட், வி. மணிவண்ணன் பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## மக்கள்...

வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் பாராளுமன்ற உறுப் பினரும் தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான க. வி. விக்னேஸ்வரன்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் நேற்று அவர் பங்கேற்று உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மே தினப் போராட்டங்கள், தொழிலாளர் போராட்டங்கள் ஆகியன வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் உண்மையை உணர்த்தி நிற்கின் றன. அதாவது, போராட்ட மனோ நிலையை நாங்கள் கைவிட்டோமானால் இழந்த உரிமைகளை நாம் திரும்பவும் பெறமுடியாது என்பதே அது. ஆயுத மேந்தி போராடுவது மட்டும் போராட் டம் என்று நாம் நினைக்கக்கூடாது. போராடும் போது செயல்திறனும் செயல்நுட்பமும் எமக்கு அவசியம். அவ்வாறான ஒரு மனநிலையில்தான் இன்று ஒரு தமிழ் பேசும் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கவேண்டும் என்று சொல்லிவருகின்றோம்.

பொதுவேட்பாளர் தேர்தலில் நாம் தேர்தலில் வெல்ல போட்டியிடவில்லை. பின் எதற்காக என்று கேட் டால் எமது நிலையை எமது மக்களுக் கும் மற்றையோருக்கு தெளிவுபடுத்தவும் மக்கள் தீர்ப்பு (Referendum) ஒன்றை வட, கிழக்கு மாகாணங்களில் பெற ஆவன செய்யவுமேதான் இந்த ஏற்பாட்டை வலியுறுத்துகின்றோம்.

ஒற்றையாட்சியானது இந்த நாட்டை சிங்கள மக்களுக்காக, சிங்கள மக்களால் பெரும்பான்மை சிங்கள மக்களின் நலன் பேணி நடத்தப்படும் ஓர் ஆட்சியாகும். எவர் ஆட்சிக்கு வந்தாலும் நடக்கப் போவது சிங்கள இனவழி ஆட்சியே.

எமக்கு சுயநிர்ணய அதிகாரம் இருக்கின்றது என்று யார் சொன்னார் கள்? இன்று இனவழியாட்சியே இங்கு நடந்து வருகின்றது. அதை மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்றுவதாயின் நாம் ஒற்றுமைப்பட வேண்டும். எமது குரல் ஐ. நா. வரையில் கேட்க வேண் டும். கேட்டதன் பின்னர் வட, கிழக்கில் மக்கள் தீர்மானத்துக்காக சர்வதேச நாடுகளால் இங்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதை உலகுக்கு எடுத்துக்கூற ஒரு தமிழ் பொது வேட்பாளர் ஜனாதி பதித் தேர்தலில் பங்குபற்ற வேண்டும் - என்றார். (ஐ)

# சமத்துவ மக்கள் கட்சியின் மே தினக் கூட்டம் சிறப்பு!



கிளிநொச்சி, மே 02

சமத்துவக் கட்சியின் மே தினக் கூட்டம் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள பசுமை பூங்காவில் சிறப்பாக நடைபெற்றது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு சமத்துவக் கட்சியின் தலைவர் சு. மனோகரன் தலைமையில் ஆரம்பமான மே தின கூட்டமானது ஒடுக்கும் அதிகாரத்தை உடைதெறிவோம், உரிமையை மீட்டெடுப்போம் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தம் தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் மற்றும் ஆயிரக் கணக்கான மக்களின் பங்குபற்றுலுடன் நடைபெற்றது.

நிகழ்வில் கூட்டுறவு அமைப்புகள், கடற்றொழில் அமைப்புகள், ஆசிரியர் தொழிற்சங்கம், விவசாய அமைப்புக்கள், பெண் அமைப்புகள் உள்ளிட்ட பல அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு உரையாற்றியனர். கட்சியின் மே தின பிரகடனமும் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையை சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் நிகழ்த்தினார். (ஐ)

## மீண்டும்...

திரட்டிய தரவுகளை இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு வழங்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## மக்கள் எங்களுடன்...

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தீர்மானம் மிக்கது என்றும் தேர்தலுக்கு பின்னர் நாடு எதை நோக்கிச் செல்லும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பு கெம்பல் பார்க்கில் நடந்த சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# ஐ.தே.கவில் இணைந்தார் பொதுஜன பெரமுன எம்.பி.



கொழும்பு, மே. 01

பொதுஜன பெரமுனவின் மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கயாஷான் நவநந்தன இன்று ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார்.

கயாஷான் நவநந்தன சுகாதார இராஜாங்க அமைச்சராகவும் சிறிது காலம் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## தோட்டத்...

கொடுப்பனவாகவும் மொத்தமாக ஒருநாள் ஊதியமாக 1,700 ரூபாய் வழங்கப்படும் என்று வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேலதிகமாக ஒரு கிலோ தேயிலை கொழுந்துக்கு 80 ரூபாய் வழங்கப்படும் என்றும் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியானது. (ஐ- எ)

## ஐ.ம.சக்தியும்...

நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தை எதிர்த்து அதனை சீர்குலைக்க வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் நேற்று கொழும்பு - மாளிகாவத்தையில் நடைபெற்றபோது, அதில் பங்கேற்று உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டில் உறுதிப்படுத்தப் பட்டுள்ள ஜனநாயக மற்றும் பொருளாதார மறுமலர்ச்சியையே இன்று நாடு பூராகவும் நடைபெறும் மே தின பேரணிகள் எடுத்துக் காட்டுகின்றன.

இன்று சகல இடங்களிலும் மே தினக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மக்கள் பஸ்களில் வருகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன், பஸ்களை இயக்குவதற்கு எரிபொருள் இருக்கவில்லை. அரசாங்கத்தை நாம் துணிச்சலுடன் முன்னோக்கிக் கொண்டு வந்ததாலேயே கண்டி பெரஹெராவை கண்டுகளிக்கவும் நல்லூர் திருவிழா மற்றும் தெவிநுவர பெரஹரா போன்றவற்றை பார்வையிட செல்வதற்கும் உகந்த சூழல் உருவானது

மொட்டுக் கட்சியின் ஒரு பகுதியினர் ஒத்துழைப்பு வழங்கினர். சிறீ லங்கா சுதந்திரக் கட்சியில் ஒரு தரப்பினரும் உதவ முன்வந்தனர். டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட பல தரப்பினர் எங்களுடன் இணைந்து செயல்படுகின்றனர். கட்சி சின்னமொன்று இல்லை. மொட்டுக் கட்சியின் ஒரு குழு எம்மோடு இணைந்தது.

மற்றுமொரு குழு ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டது. மிகவும் சிரமப்பட்டு இந்த நிலைக்கு வந்துள்ளோம். எமது தீர்மானங்கள் வெற்றியளிக்கும் என்று எவரும் நினைக்கவில்லை. மேலும், குற்றச் செயல்களுக்கு எதிராக கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. சிரமத்துடனாவது அந்த தீர்மானங்களை எடுத்தோம்.

தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை மாற்றினால் நெருக்கடி ஏற்படலாம். சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் நாட்டின் துரித அபிவிருத்திக்கு தேவையான நிபந்தனைகள் அடங்கிய சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன். அதற்கு ஆதரவு தருமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் அதற்கு ஆதரவளிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன் - என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

கொழும்பு, மே. 02

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைய டீசல் விலை குறைந்தாலும் பஸ் கட்டணத்தை குறைக்க முடியாது. - இவ்வாறு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

வருடாந்த விலைச் சூத்திரத்துக்கு அமையவே பேருந்துக் கட்டணத்தில் திருத்தம் செய்ய முடியும். ஆகவே, எதிர்வரும் ஜூலை மாதத்தில் கட்டணத் திருத்தம் தொடர்பில் கவனம் செலுத்தலாம் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டது என்றும் கூறினார்.

எரிபொருளைக் காட்டிலும் பஸ் உதிரிப்பாகங்களின் விலைகள் பன்மடங்கு அதிகரிக்கப்பட்டு அவற்றுக்கு விசேட வரிகளும் விதிக்கப்படுகின்றன.

எனவே, உதிரிப்பாகங்களின் விலையைக் குறைக்குமாறு அரசாங்கத்திடம் பலமுறை கோரிக்கை விடுத்தோம். இருப்பினும் அதனை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை. ஆகவே, தற்போதைய விலைக் குறைப்பின் நிவாரணத்தை பொதுப் பயணிகளுக்கு வழங்க முடியாது. - என்றார்.



மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்துக்கு அமைய டீசலின் விலை 30 ரூபாயால் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மே தின பாதுகாப்பில் 10 ஆயிரம் பொலிஸார்

கொழும்பு, மே. 02

மே தினப் பேரணிகள் மற்றும் கூட்டங்கள் காரணமாக கொழும்பில் நேற்று விசேட போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அத்தோடு 10 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்துக்குச் செல்லும் வாகனங்கள், அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் மருத்துவ மனைகளுக்கு நோயாளிகளை கொண்டு செல்லும் வாகனங்கள் வீதியில் பயணிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மேலும், அந்தந்த முகாம்களில் 1,600 படையினரை தயார் நிலையில் வைக்க முப்படைகளின் தலைவர்கள் இணைந்து அனைத்து ஏற்பாடுகளையும் முன்னெடுத்தனர் என்றும் நிஹால் தல்துவ குறிப்பிட்டார். (எ)

## கிரிக்கெட் மட்டையால் தாக்கி 13 வயது மாணவன் கொலை!

நாவலப்பிட்டி, மே. 02

நாவலப்பிட்டியில் பாடசாலை மாணவர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் மாணவன் ஒருவர் கிரிக்கெட் மட்டையால் தாக்கி படுகொலை செய்யப்பட்டார்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த 13 வயது பாடசாலை மாணவனே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார்.

கிரிக்கெட் மட்டையால் தாக்கி கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்படும் மாணவனை நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்தனர்.

இந்த இரு மாணவர்களும் பாடசாலை நண்பர்கள். இருவரும் கடந்த மாதம் 23 ஆம் திகதி கிரிக்கெட் விளையாடச் சென்ற போது, கிரிக்கெட் மட்டைக்காக ஏற்பட்ட முரண்பாட்டில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கடும் காயங்களுக்குள்ளான மாணவன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர். (எ)



## ரணசிங்க பிரேமதாஸவின் 31ஆவது சிரார்த்த தினம்

கொழும்பு, மே. 02

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 31 ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு தருமபோதனை இடம்பெற்றது.

செவ்வாய்க்கிழமை மொரட்டுவ - லுனாவ சிறீ போதிராஜாராம விகாராதிபதியும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள கற்கைகள் துறைப் பேராசிரியருமான சிறீ சுமண தேரரால் சிறீ சுச்சரித மண்டபத்தில் தர்ம போதனை நிகழ்த்தப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் பாரியார் ஹேமா பிரேமதாஸ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, குடும்ப உறவினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ)

## விருந்துபசார நிகழ்வில் தகராறு; 12 பல்கலை. மாணவர்கள் கைது!

ஹோமாகம, மே. 02

பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துபசார நிகழ்வில் ஏற்பட்ட தகராறில் ஒருவர் காயமடைந்ததுடன் 12 மாணவர்கள் கைது செய்யப்பட்டதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்களும் பட்டப்படிப்பு முடித்த பழைய மாணவர்களும் இணைந்து ஹோமாகம பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று முன்தினம் விருந்துபசார நிகழ்வொன்றை ஏற்பாடு செய்தனர்.

இந்நிகழ்வின் போது பல்கலைக்கழக மாணவர்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டதுடன் குறித்த ஹோட்டலில் பணிபுரியும் பணியாளர்கள் மாணவர்களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்த முயன்றனர்.

இதன்போது அங்கிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஹோட்டல் பணியாளர்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு அதனுடன் தொடர்புடைய சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார்.

இதனையடுத்து 12 பல்கலை. மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹோமாகம தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# எரிபொருள் விலையை குறைத்தது சினோபெக்

கொழும்பு, மே. 02

சினோபெக் நிறுவனமும் தனது எரிபொருள் விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ. ஓ. சி. நிறுவனங்கள் தமது எரிபொருட்களின் விலைகளில் திருத்தத்தை மேற்கொண்டிருந்த நிலையில் சினோபெக் நிறுவனம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 3 ரூபாயால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 365 ரூபாயாகும்.

ஒக்டேன் 95 ரக ஒரு லீற்றர் பெற்றோல் 20 ரூபாயால் குறைக்கப்பட்டு , அதன் புதிய விலை 420 ரூபாயாகும்.

அத்துடன், ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 27 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 333 ரூபாயாகும்.

சினோபெக் சுப்பர் டீசல் விலையும் 9 ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 377 ரூபாயாகும்.- என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## விபசாரத்தில் ஈடுபட்டு கைதான 25 பெண்கள் நோயால் பாதிப்பு

பேலியகொடை, மே. 02

கொழும்பு - பேலியகொடை பொலிஸ் பிரிவில் யுக்திய நடவடிக்கையின் போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 25 விபசார பெண்கள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

போதைப்பொருள் பாவனைக்காக விபசாரத்தில் ஈடுபடும் பெண்கள் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 25 பெண்களும் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இரத்த மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட போது இவர்கள் கொனோரியா, ஹெர்பெஸ் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டமை தெரியவந்தது.

சிறைச்சாலை மருத்துவமனையின் கண்காணிப்பின் கீழ் இந்தப் பெண்களுக்கு சிகிச்சையளித்து மறுவாழ்வு வழங்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், இந்தப் பெண்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் மருத்துவ பரிசோதனைகளைச் செய்து கொள்ளுமாறு பேலியகொடை பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

## சிமெந்தின் விலை 50 ரூபாய் குறைப்பு

கொழும்பு, மே. 02

நேற்று முதல் நாட்டில் நடைமுறைக்கு வரும் வகையில் சீமெந்து விலையைக் குறைக்க சீமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

50 கிலோ கிராம் சிமெந்து மூடையின் விலையை 50 ரூபாயால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி புதிய விலை திருத்தத்தின் படி சிமெந்து மூடை ஒன்றின் விலை 2, 400 ரூபாயாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## 1,990 போதை மாத்திரைகளுடன் 28 வயது இளைஞன் சிக்கினார்!

மடவல, மே. 02

யடவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 1, 990 போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மடவல உல்பத்த பகுதியைச் சேர்ந்த 28 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

விசாரணையில் சந்தேகநபரிடமிருந்து 230 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 1,800 மில்லி கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org